**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025- PW-13**

| | |
|---|---|
| Name | திரு.சுரேஷ் |
| Husband/Father Name | ராதா கிருஷ்ணன் |
| Village /Area | திருமால்பூர் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 28 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 09.03.2026.

**(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 19.01.2025 அன்று என்னுடைய மாமா ரமேஷ் என்பவர் எனக்கு போன் செய்து எனக்கு பைக் ஓட்ட தெரியாது ஆடு விற்ற பணத்தை வாங்கி வரலாம் வா என்று அழைத்தார். அகவலமோட்டூர் அட்டை கம்பனி அருகே போலீசார் மற்றும் பொது மக்கள் நின்று கொண்டிருந்தார்கள். என்ன என்று நானும் எனது மாமாவும் அங்கு சென்று பார்த்த போது எங்களை பார்த்து போலீசார் எந்த ஊர் என்று விசாரித்தார்கள். நாங்கள் திருமால்பூர் என்று கூறியவுடன் அந்த ஊரில் நடந்த சம்பவத்தை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள். அப்போது நான் 3 நாட்களுக்கு முன் தமிழரசன் மற்றும் விஜயகணபதி மீது பெட்ரால் ஊற்றி கொளுத்திய விவரம் குறித்து சொன்னேன். அதற்கு போலீசார் அந்த சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி சதீஷ்குமார் என்பவரை பிடித்து வைத்துள்ளதாக கூறினார். மேலும் சதிஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தனர். எதிரி சதீஷ்குமார் நானும் எனது நண்பர்களும் சேர்ந்து தமிழரசன் மற்றும் விஜயகணபதி மீது பெட்ரோல் ஊற்றி கொளுத்தினோம் என்று கூறினார். அவற்றை போலீசார் பதிவு செய்தனர். பதிவு செய்த விவரத்தை print எடுத்து வந்தனர். போலீசார் என்னை படிக்க தெரியுமா என்று கேட்டார்கள் நான் படிக்க தெரியாது என்று கூறினேன். போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்திலுள்ள விவரத்தை எனக்கு படித்து காண்பித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தான் வைத்திருந்த Hero Splendor Plus வாகனத்தை எடுத்து ஆஜர் படுத்தினார். அதனை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் எனது மாமா ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் 1 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் திருமால்பூரில் அருந்ததிபாளையத்தில் வசித்து வருகிறேன். எனது மாமா ரமேஷ் நெல்வாய் அருகிலுள்ள காட்டுகண்டிகையில் வசித்து வருகிறார். எனது வீட்டுக்கும் எனது மாமா ஊருக்கும் இடைப்பட்ட தொலைவு 2கி.மீ. 19.01.2025 அன்று என்ன கிழமை என்று எனக்கு நியாபகம் இல்லை.

எதிரி சதீஷ்குமார் என்ன நிற ஆடை அணிந்திருந்தார் என்றால் மேலே சட்டையா டிசர்டா என்று நியாபகம் இல்லை. கீழே முழு பேன்ட் அணிந்திருந்தார் நிறம் எனக்கு நியாபகம் இல்லை. எனது மாமா எனக்கு மதியம் 3 மணிக்கு அவருடைய கைபேசியிலிருந்து போன் செய்தார்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை 19.01.2025 அன்றே விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னுடைய மாமா ரமேஷ் என்பவர் எனக்கு போன் செய்து எனக்கு பைக் ஓட்ட தெரியாது ஆடு விற்ற பணத்தை வாங்கி வரலாம் வா என்று அழைத்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

பணப்பாக்கத்திலிருந்து எவ்வளவு தொலைவில் அட்டை கம்பனி உள்ளது என்றால் 5, 6 கி.மீ தொலைவில் உள்ளது. திசைகள் பற்றி எனக்கு தெரியாது. நான் 2வது வகுப்பு வரை படித்துள்ளேன்.

அட்டை கம்பனி அருகே மாலை 4 மணிக்கு சென்றோம். அப்போது அங்கு போலீசார் 5, 6 நபர்கள். பொது மக்கள் 5, 6 நபர்கள் இருந்தார்கள். நான் எனது ஊரிலிருந்து நெமிலி வழியே வந்து காவல் நிலையம் தாண்டி மேற்படி விசாரணை நடந்த இடத்துக்கு சென்றோம்.

நெல்வாய்க்கு அருகில் காட்டுகண்டிகை உள்ளது. நாங்கள் நெல்வாயிலிருந்து நெமிலி வரவேண்டிய அவசியமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நெல்வாயிலிருந்து காட்டுகண்டிகை வந்து பிறகு தான் நெமிலி செல்ல முடியும்.

கோகுல் என்பவர் என் உடன் பிறந்த சகோதரர் தான். அவர் இந்த வழக்கில் ஒரு சாட்சி என்றால் சரிதான். அட்டை கம்பனியிலிருந்து துறையூர் செல்லும் பாதை எந்த திசையில் உள்ளது என்றால் எனக்கு திசைகள் பற்றி தெரியாது.

அட்டை கம்பனியிலிருந்து அகவலம் செல்லும் சாலை எந்த

திசையில் உள்ளது என்றால் பணப்பாக்கம் செல்லும் வழியில் உள்ளது. திசைகள் பற்றி எனக்கு தெரியாது.

அட்டை கம்பனி அருகே மாலை 5.15 மணி வரை நானும் எனது மாமாவும் இருந்தோம். எதிரி சதீஷ்குமார் கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் தட்டச்சு செய்தார்கள். அவர் பெயர் எனக்கு தெரியாது.

தட்டச்சு செய்தது ஆண் போலீஸ் தான். சுமார் 20 நிமிடத்திலிருந்து ½ மணி நேரம் வரை தட்டச்சு செய்து இருப்பார்கள். Print எடுக்க போலீசார் என்னை நிற்க வைத்து சென்றார்கள். எந்த ஊருக்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

Print எடுக்க சென்றுவிட்டு திரும்பி போலீசார் கால் மணி நேரத்தில் வந்தார்கள். அட்டை கம்பனியிடம் வாக்குமூலம் எதுவும் தட்டச்சு செய்யவில்லை என்றும் போலீசார் print எடுக்க செல்லவில்லை என்றும் நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

நாங்கள் சென்றது எனக்கு சொந்தமான Passion Pro இருசக்கர வாகனத்தில் தான். போலீஸ் விசாரணையில் மேற்படி விவரத்தை கூறினேனா என்றால் இல்லை.

அட்டை கம்பனிக்கு என்று தனியாக கேட் இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. கைப்பற்றுதல் மகஜரையும் போலீசார் தான் தட்டச்சு செய்தார்கள். அதை சுமார் 20 நிமிடம் போலீசார் தட்டச்சு செய்தார்கள். அப்போது மாலை 5.15 மணி இருக்கும். அந்த பைக்கின் பெயர் Splendor Plus. அதன் நிறம் Blue color, பதிவு எண் பற்றி கூற முடியுமா என்றால் பதிவு எண்ணை நான் பார்க்கவில்லை.

கைப்பற்றுதல் மகஜரையும் போலீசார் print எடுப்பதற்காக சென்றார்கள். எந்த ஊருக்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த மகஜரை print எடுக்க சென்ற போலீசார் எவ்வளவு நேரம் கழித்து திரும்பி வந்தார் என்று எனக்கு தெரியவல்லை.

அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் இடும் போது நேரம் எவ்வளவு என்றால் அதை நான் கவனிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் அமர்ந்து தட்டச்சு செய்தார்களா அல்லது நின்று கொண்டு தட்டச்சு செய்தார்களா என்றால் நின்று கொண்டு தான் தட்டச்சு செய்தார்கள். பைக் மேலேயே அல்லது ஜீப்பின் மேலா தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை.

போலீசார் அட்டை கம்பனிக்கு வெள்ளை நிற ஜீப் அருகே இருந்தார்கள். அந்த ஜீப்பினுடைய பதிவு எண் பற்றி என்னால் கூற முடியுமா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

முதலில் தமிழரசனையும் விஜயகணபதியையும் கொளுத்தி விட்டதாக சதிஷ்குமார் கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் இட்டேன். 2வதாக நான் கையொப்பம் இட்டது மேற்படி எதிரி சதீஷ்குமாரிடமிருந்து கைப்பற்றுதல் மகஜரில் வாகனத்தை கைப்பற்றியதில்

தான் கையொப்பம் இட்டேன்.

மேற்படி 2 ஆவணங்களிலும் உள்ள விவரங்களை தற்போது என்னால் அப்படியே கூற முடியுமா என்றால் முடியாது. திருமால்பூரிலிருந்து அருந்ததிபாளையத்திற்கு 5 நிமிடத்துற்குள் சென்று விடலாம்.

பொங்கல் சமயத்தில் திருமால்பூரிலுள்ள ஆலமரத்துக்கு அருகே திருவிழாக்கள் நடைபெறும் என்று சொன்னால் சரிதான். விஜயகணபதி எனக்கு உறவினர் இல்லை. ஒரே இனத்தை சேர்ந்தவரா என்றால் ஆமாம். தமிழரசன் வேறொரு வகுப்பை சேர்ந்தவர்.

நான், கோகுல், விஜயகணபதி ஆகியோர் நெருங்கிய உறவினர்கள் என்று சொன்னால் கோகுல் மட்டும் எனது தம்பி. இன்று என்னுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ள ரமேஷ் எனது மாமா என்றால் சரிதான்.

நானும் எனது மாமாவும் அகவலம் அட்டை கம்பனிக்கு சென்றதாக கூறுவது பொய் என்றும் நெமிலி போலீசார் காவல் நிலையத்தில் எங்களிடம் வெள்ளை தாளில் கையொப்பம் பெற்று கொண்டார்கள் என்று சொன்னால் அது தவறு.

நான் இந்த வழக்கில் போலீசார் சொல்லி கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.09 19:20:39 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.